**OS.No.248/2023 , Dated 18.02.2026**

The witness sworn under Oaths Act 1969 on this the day of 18th day of February 2026.

**வா.சா.1 – ஆறுமுகம் த/பெ. கோவிந்த கவுண்டர் வரவழைக்கப்பட்டு 4, 5 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை.**

25.09.2002ம் தேதி ஏழுமலை வாங்கிய ஆவணத்தை தான் நான் முதல் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் சரிதான். தண்டபானியிடமும், அவரது மனைவியிடமும் இருந்து வாங்கப்பட்டது என்றால் ஏழுமலை மட்டும் வாங்கவில்லை நாங்களும் சேர்ந்து வாங்கினோம். அந்த பத்திரத்தில் கூட்டு வருமானத்தில் இருந்து வாங்கப்பட்டது என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கோவிந்த கவுண்டர் வாங்கியதாகவும் அந்த பத்திரத்தில் குறிப்பிடப்படவில்லை. எனது தகப்பனார் கோவிந்த கவுண்டர் சாட்சி கையொப்பம் தான் போட்டுள்ளார் என்றால் சரிதான். சாட்சி கையொப்பம் செய்த எனது தகப்பனாருக்கு சொத்து உரிமை வராது என்றால் சரியல்ல. கூட்டுக்குடும்ப வருமானத்திலிருந்து வாங்குவதாக இருந்தால் நாங்கள் கூட்டாக வாங்கியிருப்போம் என்றாலும், அது ஏழுமலையின் தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. எனது தகப்பனார் கோவிந்தன் வாங்கிய சொத்து இல்லை என்பதால் அது கூட்டுக்குடும்ப சொத்து இல்லை என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி ஏழுமலை அவர் தனிப்பட்ட வருமானத்தில் விலைக்கு வாங்கிய தனிப்பட்ட சொத்து என்றால் சரியல்ல. நான், ஏழுமலை மற்றும் ராகவன் கூட்டாக அனுபவித்ததாக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனாரும், நானும் எனது உடன் பிறந்தவர்களும் பாகப்பிரிவினை ஆவணம் ஏற்படுத்திக் கொண்டோமா என்றால் அப்போது ஏற்படுத்தவில்லை. தற்சமயம் ஏற்படுத்தியுள்ளோம். அது ஏற்படுத்தப்பட்ட தேதி எனக்கு தெரியவில்லை. 18.11.2008 அன்று எழுதப்பட்டது தான செட்டில்மெண்ட் ஆவணம் என்றால் சரிதான். தாவா சொத்தில் எனக்கு எழுதப்பட்ட அளவு என்ன என்றால் 1 ஏக்கர் 25 செண்டு எழுதி கொடுத்தார்கள். அந்த பத்திரத்தில் என்னென்ன விபரங்கள்

எழுதப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. ராகவனுக்கு இந்த வழக்கு சொத்தில் எவ்வளவு எழுதப்பட்டது என்று எனக்கு தெரியவில்லை. இந்த வழக்கு சொத்தை தவிர வேறு சில சொத்துக்களும் 18.11.2008 தேதியிட்ட ஆவணத்தில் எழுதப்பட்டுள்ளது என்றால் தனியாக 47 செண்டு எழுதப்பட்டுள்ளது. அந்த இதர சொத்துகளை நான் தான் அனுபவித்து வருகிறேன். ராகவனுக்கு எழுதப்பட்ட சொத்து அவரது அனுபவத்தில் உள்ளது. பாகப்பிரிவினை ஆவணம் என்பது எனது தகப்பனாரும் மற்ற குடும்ப உறுப்பினர்களும் சேர்ந்து எழுதிக்கொண்டால்தான் அது பகாப்பிரிவினை ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.2 ஆவணத்தில் 1ம் பிரதிவாதி ஏழுமலை தான் சுயமாக வாங்கியதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அதில் பொது குடும்ப சொத்து என்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். தான் மட்டுமே ஆண்டு அனுபவித்து வரும் சொத்து என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் எனக்கு அது தெரியவில்லை.

**குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியால் சரி என ஒப்புக்கொண்டு என் முன்பு கையொப்பம் செய்தார்.

SARANYA S

Digitally signed by SARANYA S
Date: 2026.02.18 14:18:09 +0530

சார்புநீதிபதி
வந்தவாசி